Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, FEBRUARY 13 2025

வியாழக்கிழமை 13, பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர் 158 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக போராட்டம்




யாழ்ப்பாணம் தையிட்டியில் திஸ்ஸ ராஜமகா விகாரை அமைந்துள்ள பகுதி மற்றும் அதனைச் சூழவுள்ள தமது காணிகளை மீளக் கையளிக்குமாறு கோரி, காணி உரிமையாளர்கள் செவ்வாய்க்கிழமை (11) மற்றும் புதன்கிழமையும் (12) பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(மேலதிக செய்திகள் 3ஆம் பக்கம்)




சர்ச்சைக்குரிய எம்.பி

## அர்ச்சுனா ரகளை இருவருக்கு காயம்



நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணம் பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது, பாராளுமன்ற உறுப்பினர் ராமநாதன் அர்ச்சுனாவால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தில் இருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## ‘விகாரையை இடிக்க வாரீர்’

### கஜேந்திரகுமாருக்கு அழைப்பாணை

சமூக வலைத்தளங்களில் ‘விகாரையை இடிக்க வாரீர்’ என பதிவிட்டமை தொடர்பில் விசாரணைக்காக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை எதிர்வரும் 14ஆம் திகதி மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P2



## “போலி விளம்பரங்களில் ஏமாற வேண்டாம்”

வேலை வாய்ப்புக்கள் தொடர்பாக வெளியாகும் போலி விளம்பரங்கள் குறித்து எச்சரிக்கையுடன் செயற்படுமாறு இலங்கை மத்திய வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய வங்கியில் வேலைவாய்ப்புகள் உள்ளதாக சமூக வலைத்தளங்களில் போலியான விளம்பரங்கள் அதிகம் பகிரப்பட்டு வரும் நிலையிலேயே, இந்த எச்சரிக்கையை மத்திய வங்கி விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கை மத்திய வங்கியில் நிலவும் எந்தவொரு வேலை வாய்ப்புக்களும் மூன்றாம் தரப்புத் தளங்களில் பதிவிறக்கம் செய்யப்படமாட்டாது.

மத்திய வங்கியில் நிலவும் வெற்றிடங்கள் அல்லது வேலைவாய்ப்புக்கள் தொடர்பாக உத்தியோகபூர்வமான அறிவித்தல்களை வங்கி வெளியிடும்.

இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளம் மற்றும் உத்தியோகபூர்வ சமூக ஊடக வலைத்தளங்களில் மட்டுமே இதுபற்றி தகவல்கள் அறிவிக்கப்படும்.

தொடர்ச்சி P2

எல்லையை தாண்டாவிட்டால்

# “பிரச்சினை எழாது”



இலங்கையின் கடல் வளத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் தமிழக மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும், இவ்வாறு நாசகார செயலில் ஈடுபட்டு விட்டு செல்லும் வழியில் தொப்புள் கொடி உறவுகள் எனக் கூறுவதில் பயன் இல்லை எனவும் கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

தமிழக மீனவர்கள் அத்துமீறும் செயற்பாடு தொடர்பில் புதன்கிழமை(12) ஊடகவியலாளர்களுக்கு விசேட கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

‘ தமிழக மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது. கடந்த காலங்களில் மூன்று நாட்கள் வந்தார்கள், தற்போது ஏழு நாட்களுக்கும் வருவதற்கு முற்படுகிறார்கள். எமது நாட்டு மீன்களை பிடிப்பது மட்டுமல்ல, கடல் வளத்தை நாசம் செய்கின்றனர். இதனால் நாளைய தலைமுறையினருக்குரிய கடல் வளம் இல்லாமல் போகிறது.

எனவே, இலங்கை எல்லைக்குள் வந்து மீன்பிடிக்க வேண்டாம் என தமிழக மீனவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். அதற்கான உரிமை அவர்களுக்கு கிடையாது. எமது நாட்டு கடல் எல்லைக்குள் வந்து மீன்களை பிடித்து கொண்டு செல்லும் வழியில் எங்களை தொப்புள்கொடி உறவுகள் எனக் கூறுவதில் பயன் இல்லை.

தொடர்ச்சி P2

அடுத்த சில நாட்களுக்கு

## பகலில் வெப்பம்; இரவில் குளிர்

நாட்டில் வியாழக்கிழமை (13) முதல் அடுத்த மூன்று நாட்களுக்கு பகல் வேளையில் கடும் வெப்பமாகவும் இரவு வேளையில் குளிராகவும் அத்துடன், வெப்பநிலையில் ஏற்ற இறக்கத்துடன் இருக்கும் எனவும் வளிமண்டலவியல் நிபுணர் மலித் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## புழல் சிறையில் திலீபன் அடைப்பு



வன்னி மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் (ஈ.பி.டி.பி) முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் இந்தியாவில் கைது செய்யப்பட்டு, புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கட்டுப்பாட்டில்

தமிழ்-சிங்கள புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியுடன் ‘எதிர அமைப்பு சந்திப்பு



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்காக ஐக்கிய அரபு இராச்சியத்தின் ‘எதெர அபி அமைப்பு’ (Ethere Api Organization) சிநேகபூர்வ சந்திப்பொன்றை செவ்வாய்க்கிழமை (11) Pullman city center இல் ஏற்பாடு செய்திருந்தது.

## குரங்குகளுக்கு கருத்தடை தோல்வி



நாட்டின் பல பகுதிகளில் செயல்படுத்தப்பட்ட டோக் குரங்குகளுக்கான கருத்தடை திட்டம் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

குரங்குகளால் ஏற்படும் அச்சுறுத்தலுக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாத்தளை மாவட்டத்தின் ஹரஸ்கமவில் முன்னோடித் திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட குரங்குகளுக்குக் கருத்தடை செய்யும் திட்டமானது, பல சவால்கள் காரணமாக தற்போது முடங்கியுள்ளதாக மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அஜித மணிக்கும தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## நவம் மகா பெரஹெரா



கொழும்பு-02 ஹுணுபிட்டிய கங்காராமய விகாரையில் நவம் மகா பெரஹெரா செவ்வாய்க்கிழமை(11) தொடங்கியது, வர்த்தகம், வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் தாய்லாந்து அரசாங்கத்தின் அரச பிரதிநிதி ஆகியோர் சடங்கு யானை மீது புனித கலசத்தை வைத்து ஊர்வலத்தை ஆரம்பித்துவைத்தனர். இந்த நிகழ்வில் பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்து கொண்டார்.

இந்த பெரஹெரா ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்தது மற்றும் பாரம்பரிய மேளக்காரர்கள், நடனக் கலைஞர்கள் மற்றும் அழகாக அலங்கரிக்கப்பட்ட யானைகளுடன் புதன்கிழமை(12) இரவும் இடம்பெற்றது.

(படங்கள்: பிரதீப் பத்திரண)





## வியாழன் இருளுமா?



நாட்டில் இன்று வியாழக்கிழமை (13) மின்வெட்டு தொடர்பான தீர்மானம் இன்றைய தினம் காலை அறிவிக்கப்படும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

வியாழக்கிழமை (13 மின்வெட்டு தொடர்பில் புதன்கிழமை (12) பிற்பகல் தீர்மானம் அறிவிக்கப்படும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது.

எனினும் தற்போதைய மின்சார தேவையை மேலும் ஆய்வு செய்து நாளை (13) காலை தொடர்புடைய தீர்மானத்தை அறிவிப்பதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

## கர்ப்பிணிகளின் கருவுக்கு ஆபத்து

நாட்டில் காற்றின் தரம் குறைந்து வருவதன் காரணமாகக் கர்ப்பிணித் தாய்மார்களின் கரு பாதிக்கப்படும் என்று சுவாச வைத்தியர் பேராசிரியர் துமிந்த யசரத்னே தெரிவித்துள்ளார்.

மாசுபட்ட காற்றானது கருவின் எடையைக் குறைக்க வழிவகுக்கும் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகளில் சுவாசப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும் என்றும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 13 பேரை நாடு கடத்த உத்தரவு


சுற்றுலாப் பயணிகளாக வந்து விசா இல்லாமல் நாட்டில் தங்கியிருந்த சீன பிரஜைகள் 12 பேரையும் ஒரு வியட்நாம் பிரஜையையும் உடனடியாக நாடு கடத்த கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனவெல செவ்வாய்க்கிழமை (11) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## பொலிஸின் காது மடலைக் கடித்த திருடன்

அனுராதபுரம் புனிதப் பகுதியில் யாத்ரீகர்களிடமிருந்து பணம் மற்றும் நகைகளைத் திருடியதாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டபோது, திருடன் ஒரு பொலிஸ் அதிகாரியின் காது மடலின் ஒரு பகுதியைக் கடித்துள்ளார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# அர்ச்சுனா ரகளை



வலம்புரி ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, எம்.பி.க்கும் இரண்டு நபர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது இந்த தாக்குதல் நடந்திருப்பது தெரியவந்துள்ளது.

ஜேர்மன் நாட்டை சேர்ந்த இலங்கையர் ஒருவருக்கும் சாரதி ஒருவருக்கும் ஏற்பட்ட முரண்பாட்டின் நிமித்தம் அர்ச்சுனா எம்.பி காணொளி எடுத்துள்ளார்.

இந்நிலையில் வெளிநாட்டிலிருந்து வருகைதந்தவர், சட்டத்தரணி மற்றும் வைத்தியராக இருந்து அனுமதியின்றி பிறரை காணொளி எடுக்கலாமா என கேட்ட நிலையில் தொடர்ந்து அர்ச்சுனா அங்கு நின்ற சாரதியையும் காணொளி எடுத்துள்ளார்.

இந்நிலையில், அர்ச்சுனாவின் தொலைபேசியை பறித்து எறிந்துவிட்டார். இந் நிலையில் அர்ச்சுனா குறித்த சாரதி மீது கிளாசால் தாக்கியுள்ளார்.

மேலும் குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் காயமடைந்த நபரை போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இது குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமையக பொறுப்பதிகாரியை தொடர்பு கொண்டு கேட்ட பொழுது அர்ச்சுனாவின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுளார்.

இந்நிலையில், தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு உள்ளதாக தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் இவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘விகாரையை இடிக்க வாரீர்’



இது தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றிருந்த கடந்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் போது, மக்களின் தனியார் காணிகளை அபகரித்து தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானங்களை அகற்றி மக்களின் காணிகள் மக்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன்.

இதன் பின்னர் - ‘விகாரையை இடிக்க வாரீர்’ என்று நான் அழைப்பு விடுத்தது போன்ற விளம்பரம் வடிவமைக்கப்பட்டு போலியான விசமப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்விடயத்தை அறிந்த உடனேயே எனது உத்தியோக பூர்வ முகநூல் மற்றும் எக்ஸ் தளத்தினூடாக, குறித்த செய்தி போலியானது என பதிவிட்டதுடன், ஊடக சந்திப்பிலும் போலி விளம்பரம் குறித்தும் எனது நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தியிருந்தேன்.

குறித்த விடயத்தை மறுத்து எனது தெளிவுபடுத்தல்களை வெளிப்படுத்தியிருந்த போதிலும், பொலிசாரினால் மல்லாகம் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 14ஆம் திகதிக்கு அழைப்புக்கட்டளை எனக்கு அனுப்பப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

### எல்லையை தாண்டாவிட்டால்

# “பிரச்சினை எழாது”



தமிழக மீனவர்கள் மீதோ, தமிழக தலைவர்கள் மீது எமக்கு எவ்வித கோபமும் இல்லை. ஒரு சில மீனவர்கள் தான் டோலர் படகுகளைப் பயன்படுத்தி, தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி எமது கடல் வளத்தை நாசமாக்குகின்றனர். அதனையே நாம் எதிர்க்கின்றோம்.

எமது நாட்டு எல்லைக்குள் அத்துமீறாவிட்டால் எவரையும் கைது செய்ய வேண்டியது தேவைப்பாடு எழாது. எனவே, எங்களது கடல் எல்லைக்குள் புகுந்து, கடல் வளங்களை நாசமாக்க வேண்டாம் என போராடும் தமிழக மீனவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் எல்லை தாண்டாவிட்டால் எவ்வித பிரச்சினையும் எழாது” என்றார்.

# பகலில் வெப்பம்; இரவில் குளிர்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மட்டக்களப்பு, அம்பாறை, மாத்தளை, பதுளை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் சிறிதளவு மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், நாட்டின் ஏனைய பகுதிகளில் பிரதானமாக சீரான காலநிலை நிலவும்.

காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் மாலை அல்லது இரவு நேரங்களில் மழை பெய்யக்கூடும்.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் சில பகுதிகளிலும் காலி, மாத்தறை, பதுளை மற்றும் குருணாகல் மாவட்டங்களிலும் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும்.

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் மழை எதிர்பார்க்கப்படுவதுடன், நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் சீரான வானிலை நீடிக்கும்.


கொழும்பில் இருந்து புத்தளம் ஊடாக மன்னார் மற்றும் மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையில் வீசுவதுடன் மணிக்கு 35 கிலோமீற்றர் வேகத்தில் வீசுவதுடன், மணிக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் என்றார்.

# புழல் சிறையில் திலீபன் அடைப்பு

இலங்கையில் இருந்து இந்தியாவின் மதுரைக்கு சென்ற ஈ.பி.டி.பி கட்சியின் முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் அங்கிருந்து மற்றொரு கடவுச் சீட்டில் வெளிநாடு செல்ல முற்பட்ட நிலையில் இந்தியாவின் கேரளாவின் கொச்சி என்ற இடத்தில் வைத்து தமிழகப் பொலிஸாரால் திங்கட்கிழமை (10) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இந்தியாவின் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்

# அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கட்டுப்பாட்டில்



மேலும், புத்தாண்டு காலத்தில் தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களைத் தொடர்ச்சியாக விநியோகிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதை உறுதி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் ஜனாதிபதி அலுவலகத்தில் இரண்டாவது முறையாகக் கூடி உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான கொள்கை தீர்மானங்களை எடுப்பது தொடர்பிலும் தீர்க்கமாக ஆராய்ந்துள்ளனர்.

நெல் கொள்வனவு குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது. நெல் கொள்வனவுக்காக ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் கடன் வசதிகளின் கீழ், கொள்வனவு செய்யப்படும் நெல்லின் அளவைக் கண்காணிக்க வேண்டியதன் அவசியம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பல அத்தியாவசிய நுகர்வோர் பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லங்கா சதோச நிறுவனம் அண்மையில் தெரிவித்திருந்தது.

# கர்ப்பிணிகளின் கருவுக்கு ஆபத்து

மேலும், சிசு இறந்த நிலையில் பிறக்க வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பேராதனை மற்றும் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகங்கள் ஆகியவை தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் காற்று மாசுபாட்டின் தாக்கம் குறித்து ஆய்வொன்றை நடத்தி வருகிறன.

வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவுகளுக்கு வருகை தரும் நோயாளிகளில் 40% பேர் சுவாசப் பிரச்சினைகளால் பாதிக்கப்படுவதாகவும் பேராசிரியர் யசரத்னே குறிப்பிட்டுள்ளார்.

# 13 பேரை நாடு கடத்த உத்தரவு

குடியகல்வு மற்றும் குடிவரவு சட்டங்களை மீறியதாக கண்டறியப்பட்ட குற்றவாளிகளுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்றாலும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் விரைவில் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு விசாக்களை பெற்றுள்ளனர் என்பதை கருத்தில் கொண்டு நாடு கடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று நீதவான் அறிவுறுத்தியுள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்களை கருப்புப் பட்டியலில் சேர்க்க குடிவரவு மற்றும் குடியேற்ற அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும், சந்தேக நபர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 50,000 அல்லது 6.5 மில்லியன் அபராதம் விதிக்கவும், அபராதம் செலுத்தப்படாவிட்டால், குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவருக்கு கட்டாய ஆறு மாத சிறை தண்டனை விதிக்கப்படும் என்று உத்தரவிடப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தலா ஒரு வருடம் சிறை தண்டனை விதித்த மேலதிக நீதவான், முன்வைக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் தண்டனையை ஐந்து ஆண்டுகளுக்கு ஒத்திவைத்ததுடன், அபராதம் செலுத்துவது கட்டாயமாகும் என்றும் உத்தரவிட்டார்.

# பொலிஸின் காது மடலைக் கடித்த திருடன்

காயமடைந்த அதிகாரி அனுராதபுரம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடமலுவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த துணை இன்ஸ்பெக்டர் (SI) ருவன்வெலிசேயவிலிருந்து ஸ்ரீ மகா போதிக்குச் செல்லும் பாதையில் பணியில் ஈடுபட்டிருந்தபோது, சந்தேக நபர் ஒரு நீர் சேமிப்பு தொட்டியின் அருகே சுற்றி திரிவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

அந்த அதிகாரி அவரைக் கைது செய்ய முயன்றபோது, சந்தேக நபர் அவரது காது மடலின் ஒரு பகுதியைக் கடித்தார். இருப்பினும், சம்பவ இடத்திற்கு விரைந்த மற்றொரு அதிகாரியின் உதவியுடன், சந்தேக நபரைக் கைது செய்ய முடிந்துள்ளது.

சந்தேக நபர் அனுராதபுரம் சங்கமித்த மாவத்தையைச் சேர்ந்தவர் என்றும், குற்றவியல் மிரட்டல், ஒரு பொலிஸ் அதிகாரிக்குக் கடுமையான காயங்களை ஏற்படுத்துதல் மற்றும் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனுராதபுரம் பொலிஸ் தலைமையக கண்காணிப்பாளர் ஆர்.எம். ஜெயவீர, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.



# குரங்குகளுக்கு கருத்தடை தோல்வி

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (11) அன்று நடைபெற்றுள்ளது இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கருத்தடை செய்வதற்கு கால்நடை மருத்துவர்களின் பற்றாக்குறையும், கிரித்தலை கால்நடை மருத்துவப் பிரிவுக்கு குரங்குகளை ஏற்றிச் செல்வதற்கு அதிக செலவினங்கள் ஏற்படுவதும் முதன்மையான தடையாக இருப்பதாக விவசாயப் பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பில் புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான கமகெதர திஸாநாயக்க மற்றும் விவசாய அபிவிருத்தி பிரதியமைச்சர் ஆகியோருக்கு அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

திட்டத்திற்கு தேவையான உபகரணங்களுக்கு 12 மில்லியன் ரூபாய் செலவாகும் என அதிகாரி தெரிவித்துள்ளார்.



### யாழ். தையிட்டியில்

# காணிகளை விடுவிக்குமாறு மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம் தையிட்டியில் திஸ்ஸ ரஜமகா விகாரை அமைந்துள்ள பகுதி மற்றும் அதனைச் சூழவுள்ள தமது காணிகளை மீளக் கையளிக்குமாறு கோரி, காணி உரிமையாளர்கள் செவ்வாய்க்கிழமை (11) மற்றும் புதன்கிழமையும் (12) பாரிய போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இப்போராட்டத்துக்கு ஆதரவாக அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

தையிட்டி பகுதியிலுள்ள சுமார் ஏழு ஏக்கர் காணியைப் பலவந்தமாகக் கையகப்படுத்தி எவ்வித அனுமதிகளும் பெறப்படாது சட்டவிரோதமாக திஸ்ஸ விகாரை விகாரை கட்டப்பட்டுள்ளது. இப்பகுதியிலிருந்த மக்கள் யுத்தம் காரணமாகக் கடந்த 1990ஆம் ஆண்டு வெளியேறியிருந்தனர். பின்னர் அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதனால், இராணுவத்தினர் வசம் இப்பகுதி சென்றது.

போர் நிறைவடைந்த நிலையில் மக்கள் மீள்குடியேற, இராணுவத்தினர் கட்டம் கட்டமாக அனுமதித்தனர்.

இருப்பினும், தற்போது விகாரை அமைந்துள்ள மற்றும் அதனைச் சூழவுள்ள சுமார் 14 ஏக்கர் காணியில் மக்கள் மீள் குடியேற இதுவரை அனுமதிக்கப்படவில்லை.

யாழ். மாவட்ட மற்றும் தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில், விகாரையின் கட்டுமானப் பணிகளை நிறுத்தி அப்பகுதிகளை மக்களிடம் மீள ஒப்படைக்குமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இருப்பினும் காணிகள் மீளக் கையளிக்கப்படாது இராணுவத்தினரின் உதவியுடன் விகாரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் யாழ். தையிட்டி திஸ்ஸ ராஜமகா விகாரை அமைந்துள்ள மற்றும் அதனைச் சூழவுள்ள தமது காணிகளை மீளக் கையளிக்கக் கோரி, காணி உரிமையாளர்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.















### அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு

# நட்டஈடு வழங்கியமைக்கு விசாரணை தேவை

கொழும்பு - காலி முகத்திடல் இடம்பெற்ற போராட்டத்தின்போது தீக்கிரையாக்கப்பட்ட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு, நட்டஈடு வழங்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

எந்த ஒரு முறைமையையும் பின்பற்றாமல் இந்த நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள சிவில் செயற்பாட்டாளர்கள் சிலர் செவ்வாய்க்கிழமை (11) அன்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடும் செய்துள்ளனர்.

சிவில் செயற்பாட்டாளரான எச்.எம்.எஸ்.பி.மெதவத்த உள்ளிட்ட சிலரே, இவ்வாறு மேற்படி ஆணைக் குழுவில் முறைப்பாட்டை முன் வைத்துள்ளனர்.



திறைசேரியினால் விடுவிக்கப்பட்டுள்ள மேற்படி கோடிக்கணக்கான நட்ட நிதி, நாட்டு மக்களின் நிதி என்பதையும், பொதுச் சொத்து என்பதையும் முறைப்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால், இவ்வாறு முறையின்றி வழங்கப்பட்ட நட்டஈடுகளை மீளப்பெறுமாறு ஆணைக்குழுவிடம் கோரியுள்ளனர்.

முன்னாள் அமைச்சர்களுக்கு கோடிக்கணக்கான அல்லது மில்லியன் கணக்கான சொத்துக்கள் உள்ளன.

நீண்ட காலமாக அரசியலில் இருந்துள்ள இவர்களுக்கு அவ்வாறான சொத்துக்களை சேர்க்கும் அளவுக்கு சம்பளம் இருக்கவில்லை.

அவ்வாறானால் அத்தகைய கோடிக்கணக்கான சொத்துக்களை எவ்வாறு சம்பாதித்தார்கள் என்ற கேள்வி எழுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த வகையில், எவ்வாறு அவர்கள் இந்தளவு சொத்துக்களை சம்பாதித்தார்கள் என்பதையும் அவர்களுக்கான நட்டஈடு எந்த முறைமையின் கீழ் எவ்வாறு மதிப்பிடப்பட்டு வழங்கப்பட்டது என்பது தொடர்பிலும் உடனடியாக விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# பிரதமர் தலைமையில் ‘டவர் நாடக விழா’ ஆரம்பம்

புத்தசாசன மற்றும் கலாசார அமைச்சின் கீழ் செயல்படும் ரவர் மண்டப நாடக மன்றம் 05வது தடவையாக ஏற்பாடு செய்த “எதிர்பார்ப்பின் மேடை நிகழ்வு ‘டவர் நாடக விழா’ டவர் மண்டப மன்ற தலைவர் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில், மருதானை டவர் மற்றும் எல்பின்ஸ்டன் நாடக மன்றத்தை மையமாகக் கொண்டு செவ்வாய்க்கிழமை(11) ஆரம்பமாகியுள்ளது.

நாடகத்தை ரசிப்பதற்குத் தரமான பார்வையாளர்களை உருவாக்குதல் நாடகக் கலைஞர்களின் வருமானத்தை அதிகரித்தல், நாடகத்தை ஊக்குவித்தல் மற்றும் நாடகம் தொடர்பாகப் பரந்த சமூக கலந்துரையாடல்களை உருவாக்குதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறை நாடக விழா தொடர்ந்து 10 நாட்கள் இடம் பெறும். இங்கு 14 முழு நீள நாடகங்கள், 12 குறு நாடகங்கள் மற்றும் 08 சிறுவர் நாடகங்கள் என மொத்தமாக 34 நாடகங்கள் 68 முறை மேடையேற்றப்பட உள்ளன. நாடக விழா நடைபெறும் 10 நாட்களும் ரவர் கலைஞர்கள் இருவர் வீதம் 20 பேருக்கு வாழ்நாளில் ஒரு தடவை மட்டும் வழங்கப்படுகின்ற ‘ரவர்’ பாராட்டு விருது மற்றும் பண பரிசில்கள் வழங்கப்படும். இதில் முதல் விருது சிரேஷ்ட கலைஞர் விஜேரத்ன வரகாகொடவிற்கு பிரதமர் ஹரிணி அமரசூரியவினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.



# சுவிஸ் தூதுவரிடம் சஜித் கோரிக்கை

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் கலாநிதி சிறி வோல்ட்க்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையே விசேட சந்திப்பொன்று செவ்வாய்க்கிழமை (11) அன்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

சுவிட்சர்லாந்து போலவே இந்த நாட்டிலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திட்டங்களுக்கு சுவிட்சர்லாந்து அரசின் அதிகபட்ச உதவிகளைப் பெற்றுத் தருமாறு எதிர்க்கட்சித் தலைவர் சுவிட்சர்லாந்து தூதுவரிடம் இதன்போது கோரிக்கை விடுத்தார். புதை படிவ எரி பொருட்களிலிருந்து (fossil fuels) புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறுவதற்கான சுவிட்சர்லாந்தின் 2023 சட்டத்தைப் பாராட்டிய அவர் , காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இது ஒரு வரலாற்றுத் திருப்பம் என்றும் தெரிவித்தார்.

கடந்த வார இறுதியில் இலங்கையில் ஏற்பட்ட மின்வெட்டு குறித்துப் பேசிய சஜித் பிரேமதாச , புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் கவனம் செலுத்துமாறு தானும் தனது குழுவினரும் தொடர்ந்து அரசுக்குப் பரிந்துரை செய்ததாகத் தெரிவித்ததுடன், மின் நுகர்வு மற்றும் மின் உற்பத்தியே இடையே ஏற்பட்ட நிலைமையே இந்த மின் தடைக்குக் காரணம் என்றும் விளக்கமளித்தார்.



பேட்டரி ஆற்றல் சேமிப்பு கட்டமைப்பு BESS மற்றும் PSPP போன்றவற்றின் அவசரத் தேவைப்பாடுகள் குறித்தும் இதன்போது சுட்டிக்காட்டினார்.

எனவே, மின்வெட்டு இல்லாமல் மக்களுக்குத் தொடர்ந்து மின்சாரம் வழங்கக் குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை அரசாங்கம் விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டியதுடன் இதற்குத் தேவையான ஒத்துழைப்புகளைப் பெற்றுத் தருமாறும் சுவிட்சர்லாந்து தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார்.

இச்சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்னவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சின்ன இங்கிலாந்தில் பழைய தொழில்: நால்வர் கைது

**செ.தீவாகரன் டி.சந்ரு**

நுவரெலியாவில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கிய விபசார விடுதி சுற்றிவளைக்கப்பட்டு அங்கு சேவையாற்றிய நான்கு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியா -கண்டி பிரதான வீதியில் பம்பரகலை பகுதியில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கிவந்த சமூகப் பிறழ்வான விடுதி ஒன்றினை செவ்வாய்க்கிழமை (11) பொலிஸார் முற்றுகையிட்டு அங்கிருந்த நான்கு பெண்களும் இரண்டு ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயுர்வேத ஸ்பா நிலையம் என்ற பெயரில் பாலியல் தொழில் செயற்பாடுகள் நடைபெறுவதாக நுவரெலியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, நுவரெலியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் முற்றுகையிட்டு திடீர் என சோதனையிட்டுக் குறித்த மசாஜ் நிலையம் சுற்றி வளைக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 21,25,34 மற்றும் 34 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் இவர்கள் வெளிமடை, இரத்தினபுரி. கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.




இதில் விபச்சார விடுதி நிர்வாகத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரும் விபச்சாரத்தில் ஈடுபட்ட நான்கு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்

இவ்வாறு கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களையும் தடுத்து வைக்கப்பட்டு தனித்தனியாக விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓமனியாமடுவில் கைக்குண்டு மீட்பு

**கனகராசா சரவணன்**

மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஓமனியாமடு பிரதேசத்தில் கைவிடப்பட்ட காணி ஒன்றிலிருந்து கைக்குண்டு ஒன்று செவ்வாய்க்கிழமை (12) மீட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த காணியில் துப்பரவு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்றைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து அதனை மீட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.



இது தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேலதிக மேற்கொண்டுவருகின்றனர்.

# குட்டி லண்டனில் உறைபனி

ஒவ்வொரு ஆண்டும், டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் குட்டி லண்டன் என்று வர்ணிக்கப்படும் நுவரெலியாவில் உறைபனி காணமுடியும். ஆனால் இந்த முறை பனி அடர்த்தியாக விழுந்திருப்பதைக் காண முடிந்தது.

நுவரெலியா நகர எல்லைக்குள் உள்ள சில இடங்களிலும், கந்தபொல பகுதியிலும் இந்த நிலைமை காணப்பட்டது, மேலும் முந்தைய ஆண்டுகளில் உறைபனி தொட்ட போது தண்ணீராக மாறியது.

ஆனால் இந்த முறை, விழுந்த பனிக்கட்டியைச் சேகரித்து, சில நிமிடங்கள் கைகளில் வைத்துக் கொள்ளலாம் என்று மக்கள் கூறுகிறார்கள்.

இதன் காரணமாக, நுவரெலியா பகுதியில் வெப்பநிலை 7-4 டிகிரி செல்சியஸாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# பிரதி அதிபர் விடுதியில் திருட்டு; பெற்றோருடன் மகனும் கைது

**எஸ்.சதீஸ்**

பொகவந்தலாவ - கெர்கஸ்வோல்ட் இல-02 தமிழ் வித்தியாலயத்தின் பிரதி அதிபருக்கு வழங்கப்பட்ட விடுதியை உடைத்துக் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூவரில் இருவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறும் 15 வயதுடைய சிறுவனை, சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்குமாறும் ஹட்டன் நீதிமன்ற நீதவான் புதன்கிழமை(12) உத்தரவிட்டுள்ளார்.

அதிபரின் விடுதிக்குள் நுழைந்து விடுதியிலிருந்த மடிக்கணினி, தங்க ஆபரணங்கள் மற்றும் எரிவாயு சிலிண்டர் என்பன களவாடப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் (தாய்,தந்தை,மகன்) செவ்வாய்க்கிழமை (11) அன்று கைது செய்யப்பட்டதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த சந்தேக நபர்களின் வீட்டை சோதனையிட்ட போது களவாடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சிறைச்சாலைகளை நவீனப்படுத்த நடவடிக்கை அவசியம்

சிறைச்சாலை என்பது நான்காயிரம் ஆண்டுகள் பழைமையான ஒரு கருத்து. உலகின் முதல் சிறைச்சாலைகள் மொசப்பதேனிய- எகிப்திய நாகரிகங்களில் கட்டப்பட்டன. நவீன சிறைச்சாலைகள் தரைக்கு மேலே இருந்தாலும், சிறைச்சாலைகள் நிலத்தடியில் அமைந்திருந்தன. அந்தக் காலத்தில் நிலத்தடி குகைகளைத் தோண்டி, குற்றவாளிகளையோ அல்லது சந்தேக நபர்களையோ அவற்றில் அடைத்து வைப்பது வழக்கமாக இருந்தது.

ஒரு கனமழையின் போது, நிலவறைகள் தண்ணீரால் நிரம்பி, அனைத்து கைதிகளும் இறந்தனர். ஒரு பூகம்பம் ஏற்பட்டபோது, இந்தக் குகைகள் அனைத்தும் இடிந்து விழுந்தன, கைதிகள் இடிபாடுகளுக்கு அடியில் புதைந்து இறந்தனர். இந்த நேரத்தில், சிறைக்குச் சென்றவருக்கு விடுதலை இல்லை, மேலும் இரண்டு தண்டனைகள் விதிக்கப்பட்டன. இவற்றில் முதலாவது மரணம். இரண்டாவது அடிமைத்தனத்திற்கு விற்பனை. எனவே, இந்த நேரத்தில், கைதிகள் சுதந்திரத்தை அடிமைத்தனத்திற்கு விற்கப்படுவதை அங்கீகரித்தனர்.

நவீன இலங்கையின் சிறைச்சாலைகளுக்கும் அந்தக் கால சிறைச்சாலைகளுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. ஒரு வித்தியாசம் இருந்தால், அது நோய்வாய்ப்பட்ட கைதிகள் கொல்லப்படுவதில்லை என்பதுதான்.

இந்த நாட்டின் சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை முந்நூறு சதவீதத்தைத் தாண்டியுள்ளது.

ஆண்டுதோறும் சிறையில் அடைக்கப்படும் மக்களின் எண்ணிக்கையும் 300 சதவீதம் அதிகரித்துள்ளது. வெலிக்கடை சிறைச்சாலையின் சுவர்களில் வரையப்பட்ட அழகான வண்ணங்களோ அல்லது சிறைச்சாலைத் தோட்டத்தில் நடப்பட்ட மலர் படுக்கைகளின் அழகோ உள்ளே இல்லை.

சிங்கள மன்னராட்சிக் காலத்தில் இந்த நாட்டிலிருந்த சிறைச்சாலைகளை வெறும் சிறைச்சாலைகள் என்று அழைக்கக்கூடாது, மாறாக சித்திரவதை சிறைகள் என்று அழைக்க வேண்டும். இவற்றிலிருந்த கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். சில சமயங்களில் அந்தக் கைதிகள் கழுமரத்தில் அறையப்பட வேண்டியிருந்தது. மற்ற நேரங்களில், அவர்கள் சிதைக்கப்பட்டனர்.

வெலிக்கடை சிறைச்சாலை 1871இலும் மஹர சிறைச்சாலை 1875இலும், போகம்பரை சிறைச்சாலை 1876இலும் நிறுவப்பட்டன. இலங்கை முழுவதும் ஏராளமான சிறைச்சாலைகள் உள்ளன. அவற்றில் 75 சதவீதம் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் கட்டப்பட்டன. இதற்குக் காரணம், இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் வளர்ச்சியடையும் போது, குற்றங்கள் அதிகரிக்கும் போது கைதிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்பதை பிரிட்டிஷ் ஆட்சியாளர் அறிந்திருந்தார்.

1948க்குப் பிறகு, புதிய சிறைச்சாலைகளின் கட்டுமானம் மெதுவாகி, படிப்படியாகச் சிறைச்சாலைகளுக்கும் கழிப்பறைகளுக்கும் இடையில் ஒரு வேறுபாடு தோன்றத் தொடங்கியது. வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் எண்ணிக்கை தற்போது மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, ஒரு கைதி வசிக்கும் அதே அளவு நிலத்தில் மூன்று கைதிகள் வசிக்கின்றனர். வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள கைதிகள் படுத்துத் தூங்க சில நாட்களில், அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் நின்று கொண்டே தூங்க வேண்டும். வெலிக்கடையில் போக்குவரத்து நெரிசல் அதே அளவுக்கு மோசமாக உள்ளது.

ஒரு காலத்தில் சிறைச்சாலையாக இருந்த பொரளையில் உள்ள நிலத்தை, வீட்டு வளாகம் அல்லது தொழில்துறை நோக்கங்களுக்காக வெளிநாட்டினருக்குக் குத்தகைக்கு விடலாம் என்ற கருத்து பொதுவெளியில் பேசப்பட்டது. எனினும், அந்த கருத்து அப்படியே மறக்கப்பட்டுவிட்டது.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

மனிதர்கள் தாங்கள் செய்த புண்ணியங்கள், பாவங்கள் என்பவற்றைக் கணக்கிட்டுச் சொல்லமுடியாது. அவற்றை முழுமையாகச் சொல்லவும் மாட்டார்கள். சின்னதாகச் செய்த நல்லதை மட்டும் சொல்பவர்கள், பாவங்கள் எதையும் செய்ததே இல்லை என்று கூறிவிடுவார்கள்.

மனசாட்சி அவர்களுக்கு விளக்கமாகச் சொல்லிக் கொண்டே இருக்கும். எந்த உயிரையும் இம்சிப்பது, வதைப்பது மகா பாவம். உயிர்கள் அனைத்துமே உலகுக்கு உரியன. மனிதர்களுக்கு ஆணவம், அகந்தை அகல்வது இல்லை.

பொய்களைச் சொல்பவர்களால், மெய்களைச் சொல்லத் தயக்கம் காட்டுகிறார்கள். வாய்மை உள்ளவர்களை வையகம் ஏன் போற்றுகின்றது? இதை நாம் உணரவேண்டும்.

இரக்கம், அன்பு ஓங்கினால், பாவங்கள் என்பதே உலகில் நடக்காது. தற்செயலாகத் தவறுகளைச் செய்வதைவிட, வேண்டுமென்றே தொடர்ந்தும் தவறுகளைச் செய்பவர்கள் ஏராளம்.

நிம்மதியான வாழ்க்கையை அமைக்க, நீதி நெறியுடன் கூடிய வாழ்க்கையை வாழ்ந்தேயாகவேண்டும்.

எவரையும் வருத்துவதால், எமது நிம்மதி பறிக்கப்படுகின்றது. தற்காலிகமாகச் சந்தோசப்படும் கயவர்கள், துன்பப்பட்டே தீருவர்.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# சில காலத்தில் வாய்ப்பே இல்லாது போய்விடும்

முருகானந்தன் தவம்

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க, அவரின் கட்சியான தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றினால் தமிழ் மக்களுக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள், கொடுக்கப்பட்ட நம்பிக்கைகள் அனுரகுமார ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரும் தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் அரசமைத்த பின்னரும் கொஞ்சம் கொஞ்சமாகத் திசை தெரியாமல் காற்றில் பறக்க விடப்படுகின்றன. நம்பிக்கைகள் தகர்க்கப்படுகின்றன.

அனுரகுமார ஜனாதிபதியான பின்னர் ஒரேயொருதடவை மட்டும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினரை சந்தித்து தமிழர்களுக்கான தீர்வுகள், பிரச்சினைகள் தொடர்பில் மேலோட்டமாகப் பேசியிருந்தார். அதன் பின்னர் எவ்வித சந்திப்புக்களோ தீர்வுக்கான நகர்வுகளோ இடம்பெறவில்லை. அதேநேரம், ஜனாதிபதி தேர்தல் காலத்தில் அனுரகுமாரவினால் தமிழ் மக்களுக்கும் தமிழ்த் தேசிய கட்சிகளுக்கும் வழங்கப்பட்ட 'தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை' என்ற உறுதிமொழி பற்றி ஜனாதிபதி வாய்திறக்கவில்லை. அவரின் நீதி அமைச்சரும் அரசும் 'அரசியல் கைதிகள் என எவரும் இல்லை' என்ற பழைய அரசுகளின் பல்லவியையே மீண்டும் பாடத் தொடங்கியுள்ளனர்.

அனுரகுமார அரசுதான் இவ்வாறு தமிழ் மக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்கின்றதென்றால், இந்த அரசுடனாவது தமிழ் மக்களின் உரிமை சார் விடயங்களைப் பேசி தீர்வொன்றைக் காணவேண்டிய தார்மீக பொறுப்பிலுள்ள தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் 'பொறுப்புத் துறந்தவர்'களாக செயற்பட்டு வருவதனால், அனுரகுமார அரசியலாவது கிடைக்குமெனத் தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்த தமிழர் தீர்வுக்கான வாய்ப்பும் கை நழுவிப்போகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, அதன் தாய்க் கட்சியான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகியவற்றின் மீதான 'தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான செயற்பாடுகள், இனவாத சிந்தனைகள்' என்ற கடந்த கால குற்றச்சாட்டுக்கள் தமிழர் தரப்பால் தற்போதும் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் அவர்களின் ஆட்சியே அமைந்துள்ள நிலையில், அவர்களுடன் தமிழர் தரப்புக்கள் தமிழ் மக்களின் உரிமை சார் விடயங்களைப் பேசித்தான் ஆக வேண்டி நிலையும் உள்ளது.

நோர்வே மத்தியஸ்தத்துடனான விடுதலைப் புலிகளுடனான சமாதான பேச்சு வார்த்தையை முறியடித்து மீண்டும் போரை ஆரம்பிக்கத் தூண்டியவர்கள், தமிழர்களுக்கு எதிரான போரை நடத்த இராணுவத்திற்கு 50,000 பேரை இணைத்துக் கொடுத்தவர்கள், சந்திரிகா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சுனாமி பொதுக்கட்டமைப்பை சிதைத்தவர்கள், தமிழர்களின் தாயகமான வடக்கு, கிழக்கு இணைப்பை உயர்நீதிமன்றத்தின் ஊடாக பிரித்து தமிழர் தாயகத்தைத் துண்டாடியவர்கள் என்று அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, அதன் தாய்க் கட்சியான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகியவற்றின் மீதான தமிழர் தரப்பின் குற்றச்சாட்டுக்கள் மறுக்கப்பட முடியாதவை.

அதேவேளை, தமிழர் தரப்பால் இவ்வாறு குற்றம் சாட்டப்படுபவர்கள்தான் தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கொண்ட, தற்போதைய இலங்கை அரசியல் சூழலில் அசைக்க முடியாத அரசாங்கம். இன்னும் 5 வருடங்களுக்கு அவர்களின் ஆட்சிதான். ஆகவே, தமிழ்த் தேசியக் கட்சிகள், தரப்புக்கள் விரும்பியோ விரும்பாமலோ தமிழ் மக்களின் உரிமை சார் விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி அனுரகுமார தலைமையிலான அரசுடன் பேசித்தான் ஆக வேண்டும்.

தமிழர் போராட்டத்தை அழிக்க நான் எந்த பிசாசுடனும் கை கோர்ப்பேன் என 80களில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன கூறியிருந்தார். இதனைத்தான் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தை இனப்படுகொலையுடன் முடிவுக்குக் கொண்டுவந்த கோட்டா-மஹிந்த ஆட்சியில் அவர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தமிழர் உரிமை சார் விடயங்கள் தொடர்பான பேச்சுக்குச் சென்ற தமிழ்த் தேசிய எம்.பிக்கள் கொஞ்சம் மாற்றி 'ஈழத் தமிழர் அரசியலுக்காக எந்தப் பிசாசுடன் பேசுவதற்கும் நாங்கள் தயார்' என அறிவித்திருந்தனர்.

அதுமட்டுமன்றி, சமாதானப் பேச்சுக்கள் என்ற பெயரில் விடுதலைப் புலிகளைப் பலவீனமாக்கி, சர்வதேசத்தைத் தமிழர் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகத் திருப்பி புலிகள் மீது சர்வதேச தடைகளை விதித்து, கருணா அம்மானை விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரித்து, வடக்கு, கிழக்கு பிரதேச வாதத்தை உருவாக்கிய, 'நரி' என விடுதலைப் புலிகளினாலே அழைக்கப்பட்ட ரணில் விக்ரமசிங்கவை இன்றும் தர்ம தேவனாக, சமாதான தூதுவனாக,தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு தரும் தலைவனாக நம்பும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள், தமிழ் தரப்புக்கள் அனுரகுமார தரப்பினரை நம்ப மறுப்பது, அவர்களுடன் பேச்சு நடத்துவது வீண் வேலையெனக் கூறுவதுதான் வேடிக்கை.

> தமிழ்த் தேசிய அரசியலைப் பலப்படுத்த, தமிழர் சார் உரிமை விடயங்களை ஒரே குரலில் வெளிப்படுத்தத் தமிழ் தேசியக் கட்சிகள் பகைமையை, நீயா நானா போட்டியை, கழுத்தறுப்பு அரசியலை தற்காலிகமாகவேனும் மறந்து ஒற்றுமைப்படவேண்டியது அவசியம்

அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, அதன் தாய்க் கட்சியான மக்கள் விடுதலை முன்னணி (ஜே .வி.பி.) ஆகியவற்றின் மீதான தமிழர் தேசத்தின் குற்றச்சாட்டுக்களை விடவும் படு மோசமான இனப் படுகொலைகள், போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், நில ஆக்கிரமிப்புக்கள், பௌத்த மயமாக்கல்கள், சிங்கள மயமாக்கல்களை நேரடியாகச் செய்த கோட்டா-மஹிந்த அரசுடன் அப்போது தமிழர் உரிமைகள் தொடர்பாகப் பேச முடிந்த தமிழ்த் தேசிய கட்சிகள் இவ்வாறான குற்றங்களுக்கு ஆதரவாக நின்றவர்கள் என்ற குற்றத்தை மட்டும் செய்த தேசிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணியுடன் மட்டும் ஏன் பேச்சு வார்த்தை நடத்தக் கூடாது?

ஆனால், நாம் அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசுடன் தமிழர் உரிமை சார் விடயங்களைப் பேசப் போகும்போது நாமும் பலமானவர்களாக, ஒற்றுமைமிக்கவர்களாக, ஒரே உணர்வு, சிந்தனை, இலக்கு கொண்டவர்களாக இருக்க வேண்டும். எனினும், இந்த பண்புகள் எம்மை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளிடையில் மருந்துக்குக்கூட தற்போது இல்லையென்பதே இன்றைய தமிழர் அரசியலின் பரிதாபநிலை. தமிழர்களைப் பலமிக்கவர்களாகப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்து தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி என பிரிந்து பலவீனமாகியுள்ள நிலையில், இவர்களினால் தனித்தனியாக எதனைச் சாதித்து விட முடியும்?

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் தற்போதைய இவ்வாறான பலவீனமான, ஒற்றுமையில்லாத நிலையை அறிந்துதான் அனுரகுமார அரசின் முக்கியஸ்தர்கள் சிலர் தமிழ் கட்சிகள் தனித்தனியே நின்று தீர்வுக்கான கருத்துகளைக் கூறாமல், ஒன்றுபட்டு ஒரே கருத்தைக் கூறுவார்களாக இருந்தால் அது தொடர்பில் பேசலாம் என்றவாக்கக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலையில் தமிழ்த் தேசிய கட்சிகள்,தமிழ் தரப்புகள் அவதானமாகவும் ஒன்றுபட்டும் செயற்பட வேண்டியதன் அவசியத்தைத் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் உள்ளோர் கண்டிப்பாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் புரிந்துகொள்ள மறுப்பதும் புரிந்தும் புரியாததுபோல் நடிப்பதுமென தமிழர் நலன் அரசியலைக் கைவிட்டு தமது நலன் அரசியலை முன்னெடுக்கும் நகர்வுகளே தற்போது இடம்பெறுகின்றன.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசுடன் பேச்சு நடத்துவதற்குத் தமிழ் தேசியக் கட்சிகளிடையில் ஒற்றுமை இல்லாவிட்டாலும் பரவாயில்லை அனுர அரசினால் தமிழர்களுக்கு ஏற்படப்போகும் சில ஆபத்தான விடயங்களைக் குறிப்பாக, உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை எதிர்கொள்ள, புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை எதிர்ப்பதற்காகவேனும் தமிழ் தேசியக் கட்சிகளிடையில் ஒற்றுமை அவசியம். ஆனால், இந்த அவசியத்தைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். இலங்கை தமிழரசுக் கட்சியை சேர்ந்த சிவஞானம் சிறீதரன் ஆகியோரைத் தவிர வேறு எவருமே புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

எனவே, தமிழ்த் தேசிய அரசியலைப் பலப்படுத்த, தமிழர் சார் உரிமை விடயங்களை ஒரே குரலில் வெளிப்படுத்தத் தமிழ் தேசியக் கட்சிகள் பகைமையை, நீயா நானா போட்டியை, கழுத்தறுப்பு அரசியலை தற்காலிகமாகவேனும் மறந்து ஒற்றுமைப்படவேண்டியது அவசியம். 'ஈழத் தமிழர் அரசியலுக்காக எந்தப் பிசாசுடன் பேசுவதற்கும் நாங்கள் தயார்' என் அறிவித்தவர்கள் ஈழத் தமிழர் அரசியலுக்காக 'தமக்குள் குடிகொண்டிருக்கும் சுயநலப் பேய்'களையும் விரட்டத் தயாராக வேண்டும். இல்லையேல் தமிழ்த் தேசிய அரசியல் என்று சொல்வதற்கு இன்னும் சிறிது காலத்தில் வாய்ப்பே இல்லாது போய்விடும்.

## கடிதங்கள்

### வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

அட்டாளைச்சேனை - அக்கரைப்பற்று பிரதேசங்களை இணைக்கும் கோணாவத்தை ஆற்றங்கரை பிரதான காபட் வீதி கடந்த மூன்று மாத காலமாக சிதைவடைந்து காணப்படுவதாகவும் தற்போது இவ் வீதியூடானபோக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை மற்றும் ஒலுவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் தினமும் பயன்படுத்தும் குறித்த பாதையை புனரமைத்து தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அதிகாரிகள் அசமந்தப் போக்கில் உள்ளதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அாண்மையில் பெய்த அடைமழையுடன் வெள்ள நீர் நிறைந்திருந்ததால் அதை அப்புறப் படுத்தும் வகையில், குறித்த வீதி அட்டாளைச்சேனை பிரதேச சபை மூலம் உடைக்கப்பட்டு ஆற்றுப் பகுதிக்குள் வெளியேற்றப்பட்டது.

இவ்வாறு உடைக்கப்பட்டு ஒரு மாத காலத்திற்கு மேலாகியும் சீர் செய்யப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றதுடன், மழை காலங்களில் தொடர்ச்சியாக இவ்வீதி உடைப்பெடுப்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் இப்பாதையை பயன்படுத்துவதில் பல்வேறான சிரமங்களையும் எதிர்நோக்கி வரும் நிலையில், துறைசார் அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு குறித்த வீதியை மக்கள் போக்குவரத்திற்காக தயார் செய்து தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

– எம்.ஏ.றமீஸ்





# இசை மற்றும் செய்திகளால் ஒன்றிணைந்த வானொலி

தலைமுறைகளைக் கடந்து மக்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்து பொக்கிஷமாக வானொலி திகழ்கிறது. அலைவரிசை தொடங்கப்பட்ட நாளான இன்று (பெப்ரவரி 13) உலக வானொலி நாளாக கொண்டாடப்படுகிறது.

இந்த 21ஆம் நூற்றாண்டில் உலகமே நம் கைக்குள் வந்து விட்டது. நாம் விரும்பிய செய்தி அல்லது மனநிலைக்கு ஏற்றப் பாடல்களை சில வினாடிகளில் கேட்டு விடுகிறோம். ஆனால், காத்திருந்து ஒன்றைப் பெறுவதில் சந்தோஷம் 80 மற்றும் 90ஐ சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் புரியும். அதில் ஒன்றுதான் வானொலி.

செய்தி தாள்களுக்குப் பிறகு மக்களை இசை மற்றும் செய்திகளால் ஒன்றிணைத்தது வானொலிதான். இன்னும் பலரது மனதை கொள்ளைகொள்வது வானொலி என்றால் அதை மறுக்க முடியாது. மின்சாரம் கூட இல்லாத இடங்களில் தற்போது வரை நேயர்களை அரவணைத்துச் செல்லும் வானொலிக்கான சிறப்பை உணர்த்தும் உலக வானொலி தினம் இன்று. இந்தியாவின் அதிகப்படியான கிராமங்களில் இன்றளவும் வானொலியை பயன்படுத்திதான் அன்றாட தகவல்களை அறிந்து கொள்கின்றனர்.

தொழில்நுட்பங்கள் பெரிதாக வளர்ச்சி அடைந்திடாத காலகட்டத்தில் ஒலி மூலம் தகவல்களையும் செய்திகளையும் பகிர்ந்து கொள்வதற்கான ஊடகமாகக் கண்டுபிடிக்கப்பட்ட வானொலி இன்றும் அதன் மவுசை இழக்கவில்லை. இப்போதும் உலக மக்கள் அதிகம் பேரைச் சென்றடையும் ஊடகமாக வானொலியே திகழ்கிறது.

அந்தவகையில், வானொலியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், ஐ.நா. துணை அமைப்பான யுனெஸ்கோ பெப்ரவரி 13ஐ உலக வானொலி தினமாக 2011இல் அறிவித்தது. 1946இல் ஐ.நா. வானொலி அலைவரிசை தொடங்கப்பட்ட நாளான பெப்ரவரி 13 உலக வானொலி நாளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## வானொலியின் வரலாறு:

முதல் வானொலி ஒலிபரப்பு 1895ஆம் ஆண்டில் மார்க்கோனி எனப்படும் குக்லீல்மோ மார்கோனியால் செய்யப்பட்டது என்றும், பரந்த பார்வையாளர்களை இலக்காகக் கொண்ட இசை மற்றும் பேச்சின் வானொலி ஒலிபரப்பு 1905-1906ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது என்றும் பொதுவாக நம்பப்படுகிறது.

வானொலி 1920களின் முற்பகுதியில் வணிக ரீதியாக நடைமுறைக்கு வந்தது. கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களுக்குப் பிறகு வானொலி நிலையங்கள் நடைமுறைக்கு வந்தன, மேலும் 1950களில் வானொலி மற்றும் ஒலிபரப்பு அமைப்பு உலகம் முழுவதும் ஒரு பொதுவான பொருளாக மாறியது.

ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்குப் பிறகு, 2011இல், யுனெஸ்கோவின் உறுப்பு நாடுகள் பிப்ரவரி 13ஐ உலக வானொலி தினமாக அறிவித்தன. இது 2013ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் ஒரு சர்வதேச நிகழ்வாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உலக அளவில் மிகவும் பரவலாக நுகரப்படும் ஊடகங்களில் ஒன்றான ஐ.நா., வானொலிக்கு "பன்முகத்தன்மை குறித்த சமூகத்தின் அனுபவத்தை வடிவமைக்கும் திறன், அனைத்து குரல்களும் பேசுவதற்கும், பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதற்கும், கேட்கப்படுவதற்கும் ஒரு அரங்காக நிற்கும் திறன் உள்ளது" என்று கூறுகிறது.

ஸ்பெயினின் முன்மொழிவைத் தொடர்ந்து, யுனெஸ்கோவின் நிர்வாகக் குழு 2011இல் யுனெஸ்கோவால் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனை செயல்முறையின் அடிப்படையில் உலக வானொலி தினத்தை பிரகடனப்படுத்த பொது மாநாட்டிற்கு பரிந்துரைத்தது. அதைத் தொடர்ந்து,



மார்கோனி

யுனெஸ்கோவின் அப்போதைய இயக்குநர் ஜெனரல் பெப்ரவரி 13, 1946 அன்று ஐக்கிய நாடுகளின் வானொலி தினத்தை உருவாக்க முன்மொழிந்தார், பின்னர் அதன் 36ஆவது அமர்வில், யுனெஸ்கோ பிப்ரவரி 13ஐ உலக வானொலி தினமாக அறிவித்தது.

ஜனவரி 14, 2013 அன்று யுனெஸ்கோவின் உலக வானொலி தினத்தை ஐநா பொதுச் சபை முறையாக அங்கீகரித்தது. ஐ.நா. தனது 67ஆவது அமர்வில், பெப்ரவரி 13ஐ உலக வானொலி தினமாக அறிவிக்கும் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது.

## வானொலியின் முக்கியத்துவம்:

ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, உலக வானொலி தினத்தின் நோக்கம் வானொலியின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்கள் மற்றும் ஊடகங்களிடையே அதிக விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

வானொலி நிலையங்கள் தங்கள் ஊடகத்தின் மூலம் தகவல்களை அணுகுவதை ஊக்குவிப்பதோடு, ஒளிபரப்பாளர்களிடையே நெட்வொர்க்கிங் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இலங்கையில் வானொலி:

இலங்கை வானொலியின் வரலாறானது கொழும்பு வானொலி நிறுவப்பட்ட 1925ஆம் ஆண்டிலிருந்து அடையாளம் காணப்பட முடியும். இச்சேவை பிரித்தானிய இராணுவத்தால் இரண்டாம் உலகப்போரின்போது கைப்பற்றப்பட்டதை தொடர்ந்து சிலோன் அரசாங்கத்திடம் (தற்போதைய இலங்கை) திருப்பிக்கொடுக்கப்பட்டது. வானொலித்துறையானது 1980ஆம் ஆண்டு வரை 1966ஆம் ஆண்டு சட்ட இலக்கம் 37இன் கீழ் அரசாங்க ஏகாதிபத்தியமாக இருந்தது.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தற்போது 50க்கும் மேற்பட்ட நிலையங்கள் இயங்குகின்றன. வானொலி சந்தையில் நேயர்களின் செறிவு அதிகமாக இருந்தாலும், பவர் ஹவுஸ் லிமிடெட் போன்ற சில புதிய உரிமையாளர்களுக்கு மேடையில் நுழைய போட்டித்தன்மை அனுமதிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க வகையில், பவர் ஹவுஸ் மற்றும் அஸ்ஸெட் ரேடியோ ஒலிபரப்பு ஆகியவை தலா ஒவ்வொரு வானொலி நிலையத்திலிருந்து நேயர்கள் பங்குகளை தம்வசப்படுத்தியுள்ளன. இது ஏபிசி மற்றும் த கேப்பிடல் மஹாராஜா அமைப்பு ஆகியவை தங்கள் நேயர்களை மூன்று நிலையங்களுக்கு மேல் அடையக்கூடியதாகவுள்ளதை விட வேறுபட்டது.



# பந்தம்



றொசில்டா அன்டன்

இருளில் மூழ்கியிருந்த கிராமம் மின் விளக்குகளின் மங்கலான ஒளியில் சற்று தெளிவு பெற்றது. அந்த ஒளியில் இளம் விதவை, அவளின் வீடு வெறிச்சோடி காணப்பட்டது. 23 வயதிலேயே வாழ்க்கையை இழந்து விதவையானாள் மதிவதனி. ஐந்து வருடங்களாக இரண்டு குழந்தைகளுடன் போராடிக்கொண்டிருந்தாள்.

அவளது கணவன் மூளைக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு இறக்கும் போது மூத்த மகனுக்கு வயது இரண்டும் மற்ற குழந்தை வயிற்றில் சுமந்துக் கொண்டிருந்தாள். சிறு வயது முருகனின் உயிர் நண்பனான ஆதவன், முருகனின் இறப்பிற்கு பின் மதிவதனியின் குடும்பத்திற்கு ஆறுதலானான். காலங்கள் செல்ல அவனையே அறியாமல் அந்த குடும்பத்தின் அங்கமானான். மதிவதனியின் கணவர் இறந்ததும், ஆதவன் அவளது குடும்பத்திற்கு ஒரு தூணாக நின்றான். தனது உற்ற நண்பனின் குடும்பம் நிர்கதியான நிலையை மனதில் இருத்தி அந்தக் குடும்பத்தைப் பாதுகாத்து வந்தான்.

சமுதாயம் அவளை தூற்றிய போதும், ஆதவன் அவளுக்காக வாழ்ந்தான். ஒன்பது வருடங்களை முன்னோக்கி சிந்தித்தாள். கணவனை காதலித்தே திருமணம் செய்தாள். வீட்டாரின் எதிர்பிற்கிடையிலே திருமணம் நடைப்பெற்றது. "நாசமா தான்டி போவாய் நாயே உன்னை எப்படி கஸ்டப்பட்டு வளர்த்தன் இப்படி செய்திட்டியடி" மண்ணை தூவி திட்டிய அம்மாவின் சாபம் தான் என்னை பலி வாங்கியதோ என்று நித்தமும் அழுவாள். அந்த கிராமத்தை விட்டு அயலில் உள்ள கணவனின் கிராமத்தில் புது வாழ்க்கையை ஆரம்பித்தனர். சிறு வயது அனுபவமற்ற புது வாழ்க்கை. கூலி வேலை அன்றன்றைக்கு கிடைக்கும் சொற்ப பணத்தில் வாழ்க்கை ஓடியது. முருகன் அப்பா அம்மாவை இழந்தவன். அமைதியான சுபாவம் பாட்டியிடமிருந்த வளர்ந்தவன். குடும்ப பாசத்திற்காக ஏங்குபவன். பாட்டி மிகவும் கஸ்டப்பட்டே வளர்த்தாள். அதனால் தானோ என்னவோ மதிவதனிக்கு அவன் மீது காதல் வந்திருக்கலாம். காலங்கள் உருண்டோடியது. இருவரின் குடும்ப வாழ்வில் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. "என்னங்க மாசம் தள்ளி போயிட்டு செக் பண்ணி பார்க்கனும் பாமசில காட் வாங்கி வாங்க" மதிவதினி கணவனிடம் கூற அவனும் சந்தோசத்தில் மிகப்பெரிய எதிர்பார்ப்பில் காட் வாங்கி வந்தான்.

அவள் பாத்ரூமில் இருந்து வரும் வரை ஆவலுடன் பொறுமையற்றவனாய் காத்திருந்தான். மதிவதினி புன்சிரிப்புடன் வெளியே வந்தாள். "என்னம்மா" என்றதுமே அழுதாள். முருகன் பயந்தவனாய் அவளை மார்போடு சாய்த்தான். "நாங்க நாளை ஆஸ்பத்தரிக்கு போவோம் நான் உண்டாகியிருக்கனுங்க" என்றாள். "அப்போ ஏன் அழுதனீ"

"அது ஆனந்த கண்ணீருங்க"

அவன் பாட்டியிடம் அவள் உண்டாகியிருப்பதைச் சொன்னதுமே அவளுக்கு சந்தோசம் "நான் பூட்டியாக போறன்" என்றாள்.

"மதி நீ உன்ட வீட்டில செல்ல பிள்ளையாக வசதியாக வாழ்ந்தவள் என்னை கட்டி இங்க வந்து இந்த சின்ன வீட்டில கஷ்டப்படுவதை பார்க்கும் போது கவலையாக இருக்கும்மா" என்றான். "அது ஒன்றுமில்லை கவலைப்படாமல் படுங்க" என்றாள். காலங்கள் செல்ல மகன் இரண்டு வயது இருக்கும் போது மற்ற குழந்தையும் வயிற்றில்

தலைவலியும், காய்ச்சலும் முருகனை இரண்டு நாட்களாக வாட்டியது. "என்னங்க ஒரு தடவை ஆஸ்பத்திரிக்கு போய் மருந்து எடுத்துட்டு வாங்க ஆதவனை கூட்டிட்டு போங்க துணைக்கு" என்றாள் மனைவி. "இல்லை இது சின்ன தலைவலி தான் சரியாயிடும் ரெண்டு நாளைல" என்றான். தலைவலிக்குரிய கசாயங்களை செய்து கொடுத்தும் எந்த மாற்றங்கள் நிகழவில்லை. ஆதவனுக்கு அறிவித்து அவனை வரச் சொல்லி "ஆதவன் நீங்கள் இவரை ஆஸ்பத்திரிக்கு கூட்டிப் போங்க இரண்டு நாட்களுக்கு மேலாக தலைவலியும், சத்தியும், காய்ச்சல் வேற காயுது மருந்து எடுக்க சொன்னால் கேட்கிறார் இல்லை நீங்க சொன்னால் தான் கேட்பார்" என்றாள். பாட்டி, "முருகா எழும்புடா அவ வேற புள்தாச்சி நீ இப்படி இருந்தால் அவளும் ஒழுங்காக சாப்பிட மாட்டாள். போய் மருந்து எடுத்து வாடா" என்றாள்.

"வீட்டாரின் நச்சரிப்பு தாங்க முடியலடா வாடா ஆதவா நாம ஆஸ்பத்தரி போவம்" என்றான் முருகன்.

முருகனை கூட்டிக்கொண்டு ஆதவன் வைத்தியசாலைக்கு புறப்பட்டான். போகும் வழியில் "ஆதவா எனக்கு ஏதாவது என்றால் நீ தான் மதிக்கு பாதுகாப்பாக இருக்கனும்டா மனசுக்கு ஏதோ மாதிரி இருக்குதுடா"

"வாயை மூடு உனக்கு சாதாரண காய்ச்சல் தான் ஒன்றுமில்லை" என்றான் ஆதவன்.

முருகன் இரண்டு நாட்கள் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றான். கூடவே இருந்து ஆதவன் முருகனை கவனித்துக் கொண்டான். இருந்தும் பலன் இல்லை. மூளை காய்ச்சலாம் இறப்பு செய்தியை அவள் காதில் வந்து இடியாய் விழுந்தது. செய்வதறியாது திகைத்து நின்றாள். இறுதி கிரியை அனைத்தும் முடிவுற்றது. நான்கு மாதங்களில் மற்ற குழந்தையையும் பிரசவித்தாள். பிறந்த மகளின் முகத்தை பார்த்து விம்மி விம்மி அழுதாள். முருகனின் இழப்பை அவளால் ஈடு செய்ய முடியவில்லை. தந்தை இல்லாமல் குழந்தைகளை வளர்ப்பது என்பது கடினம். பாட்டியின் தள்ளாத வயது அவளை மேலும் வலுவிழக்கச் செய்தது. ஆதவனின் ஆறுதல் மட்டுமே அவளுக்கு இருந்தது. ஆதவனின் வீட்டில் அவனை திருமணம் செய்ய நச்சரித்தார்கள்.

தங்கை இருவரையும் நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்தான். அப்பா அம்மாவிற்கு தேவையானதையும் பார்த்துக்கொண்டான்.

ஆனால், திருமணத்திற்கு பல காரணங்களை கூறி தட்டிக் கழித்தே வந்தான்.

"மதிவதினியையும், உன்னையும் சேர்த்து ஊரே ஒரு மாதிரியாக கதைக்கிறாங்கய்யா நீ ஏன் இதை புரிந்துக்கொள்கிறாய் இல்லை" என்று ஆதவனின் அம்மா அழுதாலும் "சொல்றவன் சொல்லட்டும் ஊர் நாய்கள் குரைக்கத் தான் செய்யும் எனக்கு கலியாணம் கட்டவே தோணல" என்றான். காதில் எதுவும் கேட்காதவனாய்ச் சென்று விடுவான். தான் திருமணம் செய்தால் மதிவதனியின் குடும்பம் பாதிக்கப்படும் அப்பா இல்லாத அந்த குழந்தைகளும் தந்தை பாசத்திற்கு ஏங்குவார்கள் என்று தனக்கு தானே ஆறுதல் சொல்லிக் கொண்டான். மதிவதனி எல்லாம் தெரிந்தும் அவனிடம் பல முறை இதுப்பற்றி கதைத்துள்ளான். "ஆதவன் நான் வீட்டு வேலை செய்தாவது என் குழந்தைகளை பார்த்துக் கொள்கின்றேன். நீங்கள் உங்கள் வாழ்க்கையை எங்களால் அநியாயமாக்காதீங்க" என்றாள்.

அவன் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தான். குழந்தைகள் இருவரும் அவனின் உலகமானார்கள். வெளியில் கூட்டி. செல்வது, வீட்டு பாடங்களை சொல்லி கொடுப்பது, விளையாடுவது என்று பொழுதெல்லாம் அவர்களுடன் கழித்தான். மதிவதனி சிறிதளவேனும் தன் கவலைகளை மறந்தாள்.

காலங்கள் மெல்ல கரைய பிள்ளைகளும் பெரியவர்கள் ஆகினார்கள். மகன் வங்கி முகாமையாளராகவும், மகள் ஆசிரியராகவும் தொழில் பெற்றார்கள். ஆதவன் தங்களது குடும்பத்துக்கு செய்த தியாகங்களை நினைத்து இரு பிள்ளைகளும் ஆதவனையும், மதிவதனியையும் சேர்த்து வைக்க எண்ணினார்கள்.

ஆதவனை அப்பாவாகவே நினைத்து வளர்ந்த பிள்ளைகள் "அப்ப நீங்கள் அம்மாவை திருமணம் செய்து கொண்டு சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதே எங்கள் கனவு" என்றார்கள். ஆதவன் தங்களின் தந்தையின் நண்பன் என்பது அவர்களுக்கு பிற்பாடே தெரியும். தெரிந்த பின்பே அவர்கள் இவ்வாறான முடிவினை எடுத்தார்கள். ஆனால், மதிவதனியால் இந்த முடிவை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. காரணம் அவளுக்கு வயது ஐம்பது. இதனால் தன் பிள்ளைகளின் வாழ்க்கையை சீரழித்து விடும் என்ற பயத்தினாலும், ஊரார் இதற்காகவே காத்திருந்தார்கள் என்பதாகி விடும் என்ற அச்சத்தினாலும் திருமணத்தை வேண்டாம் என்று நிராகரித்தாள்.

முருகன் இறக்கும் தறுவாயில் கூடவே இருந்து கவனித்துக்கொண்ட ஆதவனின் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டு கண்களில் கண்ணீர் வழிய அவன் மூச்சு நின்றதே கண் முன் நிழலாடியது. "காலம் பூராகவும் நல்ல நண்பனாக இருப்பதே சிறந்தது நான் வேறு திருமணம் செய்யும் எண்ணமில்லை. உங்கள் தந்தையின் நல்ல நண்பனாகவே இருக்கிறேன்" என்றான் ஆதவன். பிள்ளைகள் இருவரும் ஆதவனின் கரத்தை இறுக பற்றி மார்பில் சாய்ந்து ஆனந்த கண்ணீர் விட்டார்கள்.



சம்பியன்ஸ் லீக்:

# சிற்றியை வென்ற மட்ரிட்



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் இறுதி 16 அணிகளுக்கான சுற்றுக்கு முந்தையதான விலகல் முறையிலான சுற்றுப் போட்டியில், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் புதன்கிழமை (12) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான முதலாவது சுற்றுப் போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் வென்றது.

ஸ்பானிய லா லிகா கழகமான மட்ரிட் சார்பாக கிலியான் மப்பே, பிரஹிம் டியஸ், ஜூட் பெல்லிங்ஹாம் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். சிற்றி சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் எர்லிங் பிறோட் ஹலான்ட் பெற்றார்.

இலங்கைக்கெதிரான டெஸ்ட் தொடரையடுத்து

## குனுமென்னின் பந்து வீச்சுப்பாணி சந்தேகத்துக்குரியதென முறைப்பாடு



அவுஸ்திரேலிய இடதுகை சுழற்பந்துவீச்சாளர் மற் குனுமென்னின் பந்துவீச்சுப்பாணியானது சந்தேகத்துக்குரிய பந்துவீச்சுப்பாணியொன்றென இலங்கைக்கெதிரான டெஸ்ட் தொடரைத் தொடர்ந்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தொடரில் 16 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய குனுமென், சர்வதேச கிரிக்கெட் சபையால் அங்கிகரிக்கப்பட்ட சுயாதீனமான சோதனை நிலையமொன்றில் தனது பந்துவீச்சுப்பாணியை சோதித்தாக வேண்டும்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து

## பும்ரா விலகல்; இந்தியக் குழாமில் வருண் சக்கரவர்த்தி



சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து இந்தியாவின் ஜஸ்பிரிட் பும்ரா விலகியுள்ளார்.

தனது முதுகு உபாதையிலிருந்து இன்னும் முழுமையாக பும்ரா குணமடையவில்லை எனத் தெரிவிகிறது.

இதேவேளை, இந்தியக் குழாமிலிருந்து யஷஸ்வி ஜைஸ்வாலும் நீக்கப்பட்டு அவரின் பிரதியீடாக வருண் சக்கரவர்த்தி பெயரிடப்பட்டுள்ளார்.

பும்ராவை இந்தியக் குழாமில் ஹர்ஷித் ராணா பிரதியிட்டுள்ளார்.

இதேவேளை மேலதிக வீரர்களாக ஜைஸ்வால், மொஹமட் சிராஜ், ஷிவம் டுபே ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ஒருநாளில் இரண்டு நாடுகளில் இரண்டு போட்டிகள்:

## இலங்கை கிரிக்கெட் சபையுடன் பிரச்சினையில் ஷானக

ஐக்கிய அரபு அமீரகத்தின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான ஐ.எல்.டி20-இன் டுபாய் கப்பிட்டல்ஸுக்காக இம்மாதம் இரண்டாம் திகதி விளையாடும் பொருட்டு கொழும்பில் முதற்தரப் போட்டியொன்றிலிருந்து அன்று சில மணித்தியாலங்களுக்கு முன்னதாக இலங்கையணியின் முன்னாள் தலைவர் தசுன் ஷானக வெளியேறியது தொடர்பாக விசாரணையொன்றை இலங்கை கிரிக்கெட் சபை நடாத்தவுள்ளது.

ஷானக தலைச்சுற்றொன்றைக் கொண்டிருந்ததாக முதற்தரப் போட்டியின் மத்தியஸ்தர் நம்பியதாகக் குறிப்பிடப்பட்டதும்



கிரிக்கெட் சபையின் குற்றச்சாட்டுப்பத்திரத்தில் உள்ளடங்கியுள்ளது.

எவ்வாறாயினும் முதற்தரப் போட்டியை விட்டு தான் முன்னரே வெளியேறுவேன் என சபையின் பிரதம நிறைவேற்றதிகாரி அஷ்லி டி சில்வாவும், ஏனையோரும் முன்னரே அறிந்திருந்ததாக ஷானக கூறியுள்ளார்.

## சம்பியன்ஸ் கிண்ணத்திலிருந்து வெளியேறிய ஸ்டார்க்

### ஆஸிக்கு தலைமை தாங்கும் ஸ்மித்

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக மிற்செல் ஸ்டார்க் விலகியுள்ளார்.

இந்நிலையில் ஸ்டீவன் ஸ்மித்தால் தலைமை தாங்கப்படும் அவுஸ்திரேலியக் குழாமில் ஷோன் அபொட், பென் டுவார்ஷுஸ், ஜேக் பிறேஸர்-மக்குர்க், ஸ்பென்ஸர் ஜோன்ஸன், தன்வீர் சங்கா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அணித்தலைவர் பற் கமின்ஸ், ஜொஷ் ஹேசில்வூட், மிற்செல் மார்ஷ் காயமடைந்துள்ளதோடு, மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூர்

சிங்கப்பூருக்கு

## ஆபத்து



சிங்கப்பூரில் பயங்கரவாத தாக்குதல் எப்போது வேண்டுமானாலும் அரங்கேற வாய்ப்புள்ளது என்று, அந்நாட்டு உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் சண்முகம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், அதை எதிர்கொள்ள மக்கள் மனதளவில் தயாராக இருக்க வேண்டும்” எனவும் சண்முகம் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற தைப்பூசத் திருவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பின்னர் மக்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும் போதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

“சிங்கப்பூரில் பயங்கரவாதத்தால் ஈர்க்கப்பட்ட மூவர் மீது உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவர் 18 வயது சிங்கப்பூர் இளைஞன் ஆவார்.

“சிங்கப்பூரில் வலதுசாரித் தீவிரவாதச் சித்தாந்தத்தால் ஈர்க்கப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மூன்றாவது இளைஞர் அவர் ஆவார். “உலக அளவில் பயங்கரவாத சித்தாந்தத்தால் ஈர்க்கப்படுவோரின் எண்ணிக்கையும் அதனால் ஏற்படும் அச்சுறுத்தல்களும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

“சிங்கப்பூரில் பயங்கரவாத தாக்குதல் எப்போது வேண்டுமானாலும் அரங்கேற வாய்ப்புள்ளது. எனவே, இங்கு வசிக்கும் மக்கள் அதை எதிர்கொள்ள தங்களை மனதளவில் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்” என்றார்.

அமெரிக்கா

ட்ரம்புக்கு

## ‘ஹமாஸ்’ பதிலடி



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பணய கைதி விவகாரம் குறித்து விடுக்கப்பட்ட மிரட்டலான கருத்துக்கு, ஹமாஸ் அமைப்பு பதிலடி கொடுத்துள்ளது.

ட்ரம்பின் எச்சரிக்கைக்கு அந்த அமைப்பின் சிரேஷ்ட செய்தி தொடர்பாளர் சமி அபு ஜூரி அளித்துள்ள பதிலில், “மிரட்டல் விடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை” என கூறியுள்ளார்.

மேலும், “ட்ரம்பின் பேச்சுகள், போர் முடிவுக்கு வருவதற்கான பேச்சுவார்த்தைகளைக் கடினம் ஆக்குவது மட்டுமே செய்துள்ளது. இந்த விவகாரத்தில், மிரட்டலுக்கான மொழியில் அர்த்தம் இல்லை. அது நிலைமையை இன்னும் சிக்கலாக்கும்” எனவும் கூறியுள்ளார்.

தொடர்ந்து, “போர் நிறுத்த ஒப்பந்தம் என ஒன்று உள்ளது. அதற்கு இரு தரப்பினரும் மதிப்பளிக்க வேண்டும். இதுவே, கைதிகளைத் திரும்பப் பெறுவதற்கான ஒரே வழியாகும்” என்றும், ட்ரம்புக்கு ஜூரி நினைவூட்டினார்.

பிரேஸில்

## ஆற்றில் விடப்பட்ட 5,000 ஆமைகள்

பிரேசிலில் உள்ள இகாபோ ஆசு ஆற்றங்கரையோரம் சுற்றித்திரிந்த சுமார் 5,000 டிராஜாகாஸ் ஆமை குஞ்சுகளை, அந்நாட்டு வனத்துறையினர் பத்திரமாக மீட்டு ஆற்றில் கொண்டு விட்டனர்.

பிரேசிலில் உள்ள



டிராஜாகாஸ் என அழைக்கப்படும் மஞ்சள் புள்ளி ஆமைகள் அருகி வரும் உயிரினமாக உள்ளது.

குறிப்பாக, கடற்கரையில் அவையிடும் முட்டையை மற்ற விலங்குகள், பறவை உள்ளிட்ட உயிரினங்கள் நாசப்படுத்தி விடுகின்றன. இந்நிலையில், அதனைப் பாதுகாக்க அரசாங்கம் பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழகம்

## இணையவழி விளையாட்டுக்கு தடை

சிறுவர்கள் இணையத்தில் பணம் செலுத்தி விளையாடுவதற்கு, தமிழக அரசு தடை விதித்துள்ளது.

இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக அரசுக்கு இணையவழி விளையாட்டு ஆணையம் பல்வேறு பரிந்துரைகளை அளித்துள்ளது.

அதனடிப்படையில், தமிழக அரசு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. அந்த உத்தரவில் கூறியிருப்பதாவது,

“இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குபடுத்தும் வகையில் விதிகளைக் கடுமையாக்கப்பட்டுள்ளன. அதன்படி, 18 வயதுக்கு உட்பட்டவர்கள் இணையத்தில் பணம் செலுத்தி விளையாடத் தடை விதிக்கப்படுகிறது. மற்ற வயதினர் நள்ளிரவு 12 முதல் அதிகாலை 5 மணி வரை விளையாடத் தடை விதிக்கப்படுகிறது.

“இணையவழி விளையாட்டு நிறுவனங்கள், செயலி மற்றும் பிற சாதனங்கள் வாயிலாக வாடிக்கையாளர்கள் இணையவழி விளையாட்டில் ஈடுபடக் கணக்கு தொடங்கும் போது கேஒய்சி கட்டாயம். அதன்படி, ஆதாருடன் இணைக்கப்பட்டுள்ள அலைபேசி எண்ணுக்கு ஓடிபி அனுப்பிச் சரிபார்க்க வேண்டும். ஒருவர் இணையத்தில் ஒரு மணி நேரமாக விளையாடும்போது, அவருக்கு 30 நிமிடங்களுக்கு ஒருமுறை எச்சரிக்கை குறுஞ்செய்தி அனுப்ப வேண்டும்.

அனைத்து இணையவழி விளையாட்டு நிறுவனங்களும் நாள், வாரம், மாதம் என்றளவில் எவ்வளவு தொகைக்கு விளையாட வேண்டும் என்பதை நிர்ணயம் செய்யும் வசதியை ஏற்பாடு செய்ய வேண்டும்.



ஆந்திரா

3 மாதங்களுக்கு

## கோழி இறைச்சி விற்க தடை

ஆந்திர மாநிலம், கிழக்கு கோதாவரி, மேற்கு வங்காவரி மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது.

இதையடுத்து, ராஜ மகேந்திரவரம், மேற்கு கோதாவரி, மாவட்டம், தனுகு, வேல்பூர் உள்ளிட்ட பகுதிகள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் 3 மாதங்களுக்குக் கோழிப்பண்ணைகள் வைக்கவும், கோழிக்கறி மற்றும் முட்டை விற்பனை செய்யும் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் கோழி கடைகளும் மூடப்பட்டுள்ளன.

பொதுமக்கள் கோழி



மற்றும் முட்டைகளைப் பயன்படுத்தாமல் எச்சரிக்கையாகவும், சுகாதார நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என அரசு சார்பில் உத்தரவிடப்பட்டு உள்ளது.

மேலும், பறவைக் காய்ச்சலைத் தடுப்பதற்காகத் தமிழ்நாடு, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து லொறிகள் மூலம் கொண்டுவரப்படும் கோழிக் குஞ்சுகள், மாநில எல்லைகளில் தடுத்து நிறுத்தப்பட்டுத் திருப்பி அனுப்பப்படுகின்றன.

ஆந்திரா

## ஆந்திரா பெண்களுக்கு விசேட சலுகை

பெண்களின் வேலை மற்றும் வாழ்க்கையை மேம்படுத்தவும், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும் ஆந்திரப்பிரதேச அரசு பெண்களுக்கு `வீட்டில் இருந்து வேலை’ திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் உலகளாவிய திறன் மையங்கள் கொள்கையின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு இந்த புதிய முயற்சியைத் தனது லிங்க்ட்இன் பக்கத்தில் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 13, பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.